**இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை - 2018**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர்த்து நிதியத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையில் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறையை மேற்பார்வை செய்தல் தொடர்புபட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையில் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகள் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- முகாமைத்துவத்தினால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக சபையின் தொடர்ந்து நிலைத்திருத்தல் தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பது சம்பந்தமாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள

ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

---------------------------------

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பிலான உள்ளக கட்டுப்பாடு

-----------------------------------------------------------------------------------------------------

கொடுக்கல் வாங்கல்களின் முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் நடைமுறைப்படுத்தல், உரிய நிதியிடல் நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்கறிக்கையை பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களுக்கு பிரவேசித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணகளித்தகைமை பேணப்பட்டு சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியினுள் ஒப்பிடல் மற்றும் வேறுபாடுகள் காணப்படுமாயின் அவை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்தல் ஆகியவற்றுக்காக நியாயமான உறுதிப்பாடொன்றை பெற்றுக்கொள்ள போதியளவான ‘‘சிறப்பான முறையில் திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு கட்டமைப்பொன்றினை நிறுவகத்தினால் நடாத்திச் செல்லப்படல் அவசியமானதாகும்.

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் போது நிலையான வைப்புக்களுக்காக கிடைக்க வேண்டிய வட்டியாகிய ரூபா 2,005,156 கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் கணக்குகளைத் தயாரிக்கும் போது 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வங்கியினால் உறுதிப்படுத்தப்பட்ட மீதிகளின் சான்றிதழ்களின் பிரகாரம் வட்டி கணக்கீடு செய்யப்பட்டது. முதிர்ச்சியடையாத நிலையான வைப்புக்களுக்காக வட்டி செம்மையாக்கல் மேற்கொள்ளப்படாதிருந்ததனால் அடுத்து வரும் ஆண்டுகளின் போது இது கவனம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு சராசரி வட்டி விகிதத்தின் பிரகாரம் வட்டி கணிக்கப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிலையான வைப்புக்களுக்காகப் பெறவேண்டிய வட்டி அட்டுறு அடிப்படையில் கணிக்கப்பட்டு கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- | --- |
| (அ) 1973 இன் 15 ஆம் இலக்க தேசிய பட்டினி ஒழிப்புச் சபை அதிகாரச் சட்டம் | குளங்களிலிருந்து மண்ணை அகற்றி விற்பனை செய்தல் சபையின் பிரதான செயற்பாடு அல்லாத போதிலும் குளங்களிலிருந்து மண்ணை அகற்றி அதிவேக வீதிகளுக்கு விற்பனை செய்தல் இடம்பெற்றிருந்தது. | குளங்களை அபிவிருத்தி செய்தல் செயற்திட்டம் இராஜாங்க அமைச்சின் செயலாளர் மற்றும் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்தின் அங்கீகாரத்தின் அடிப்படையில் ஒரு செயற்திட்டமாக மேற்கொள்ளப்பட்டிருந்தது | இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச்சபை அதிகாரச் சட்டத்தில் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள செயற்பாடுகள் மாத்திரம் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) 1973 இன் 15 ஆம் இலக்க தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை அதிகாரச் சட்டத்தின் 5 ஆம் பிரிவு | பணிப்பாளர்கள் சபை அங்கத்தவர்களின் எண்ணிக்கை 11 ஆக இருந்த போதிலும் பணிப்பாளர்கள் சபைக்கு | 2018 ஆம் ஆண்டின் போது அரசாங்க நிறுவனங்களிலிருந்து பெயர் குறிப்பிடப்பட வேண்டியிருந்த | அதிகாரச் சட்டத்தில் காட்டப்பட்டுள்ளவாறு பணிப்பாளர்கள் சபைக்கு அங்கத்தவர்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வெளிநாட்டு விவகாரத்திற்குப் பொறுப்பான அமைச்சினால் மற்றும் நீர்ப்பாசன, மின்சக்தி மற்றும் பெருந்தெருக்கள் விவகார விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சினால் நியமிக்கப்படும் அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | முழுமையான அங்கத்தவர்களின் எண்ணிக்கையை நியமிப்பதில் குறைவு காணப்பட்டிருந்தும் அச் செயற்பாடுகளுக்காகவும் அரசாங்க நிறுவனங்களைப் பிரதி நிதித்துவப்படுத்தும் பணிப்பாளர் சபை அங்கத்தவர்களை நியமித்துதருமாறு விவசாய அமைச்சிற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. | நியமிக்கப்படுதல் வேண்டும். |
| (இ) | 2015 யூலை 14 ஆந் திகதிய 3/2015 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கை மற்றும் நிதிப் பிரமாணம் 371(2) (ஆ) | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் திறைசேரியின் முன் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாது ரூபா 500,000 ஒரு பணிப்பாளருக்கு இறுங்கு கொள்வனவு செய்வதற்கு வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணங்கள் நிர்ணயிக்கப்பட்ட செயற்பாடுகளுக்கு ஈடுபடுத்தப்படாது 22 நாட்களின் பின்னர் மீண்டும் தீர்த்து வைக்கப்பட்டிருந்தது. | இறுங்குகளைக் கொள்வனவு செய்யும் போது காசோலைகளின் மூலம் விவசாயிகளுக்கு பணத்தை செலுத்துவதற்கு சில நாட்கள் எடுப்பதனாலும் உரிய பணத்தை வங்கியில் வைப்புச் செய்வதற்காக பல விவசாயிகளுக்கு வங்கி கணக்குகள் இல்லாமையும் ஆகிய நடைமுறைச் சிக்கல்கள் பணிப்பாளர்கள் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக துறையிலுள்ள விவசாயிகளுக்கு பணம் வழங்குவதற்காக பணிப்பாளருக்கு ரூபா 500,000 முற்பணத்தை வழங்குவதற்கு 2561/387/2018 ஆம் இலக்க நிறைவேற்றுனர் பத்திரத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன் அதற்கிணங்க பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணங்கள் இறுங்குகளை கொள்வனவு செய்யாததன் காரணமாக மீண்டும் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. | விசேட சந்தர்ப்பங்களின் போது உத்தியோகத்தர்களுக்கு முற்பணங்கள் வழங்கும் போது அதற்காக திறைசேரியின் முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். |

(ஈ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை

------------------------------

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | நிதிப்பிரமாணம் 371 | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பாடு பூர்த்திசெய்யப்பட்ட உடன் பெற்றுக்கொள்ளப்பட்ட செயல் நிமித்த உப கட்டுநிதி தீர்த்து வைக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது 193 சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 3,066,015 தொகையான செயல் நிமித்த உப கட்டுநிதி 10 நாட்களிலிருந்து 137 நாட்கள் வரையான கால தாமதத்தின் பின்னர் தீர்த்து வைக்கப்பட்டிருந்தது. அவ்வாறே அரசாங்கத்தின் பணத்தை கையில் வைத்துக்கொண்டு தாமதித்து தீர்த்து வைத்தலை மேற்கொள்கின்ற உத்தியோகத்தர்களுக்கு அடிக்கடி செயல் நிமித்த கட்டு நிதி வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறு ஒரு செயல் நிமித்த உப கட்டு நிதியை தீர்த்து வைப்பதற்கு முன்னர் ரூபா 2,488,800 தொகையான மேலும் செயல் நிமித்த உப கட்டு நிதிகள் 12 உத்தியோகத்தர்களுக்கு 174 சந்தர்ப்பங்களில் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. | அனைத்து முற்பணங்களும் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டின் போது முற்பணங்களைத் தீர்த்து வைத்ததன் பின்னர் மாத்திரம் முற்பணங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | செயல் நிமித்த உப கட்டுநிதியானது செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்ட உடன் தீர்த்து வைக்கப்பட வேண்டியதுடன் ஒரு முற்பணத்தை தீர்த்து வைப்பதற்கு முன்னர் மேலும் செயல் நிமித்த உப கட்டுநிதிகள் வழங்கப்படாதிருத்தல் வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 371 (2) (ஆ) | 19 சந்தர்ப்பங்களின் போது 07 உத்தியோகத்தர்கள் செயல் நிமித்த உப கட்டு நிதியாக ரூபா 770,000 பெற்றுக்கொண்டு செயற்பாடுகள் நிறைவேற்றப்படாது 10 நாட்களிலிருந்து 349 | சில செயற்பாடுகளை மேற்கொள்வதற்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணங்களை அச் செயற்பாடுகளை காலம் தாழ்த்துதல் அல்லது மேற்கொள்ளாமையின் அடிப்படையில் மீண்டும் | தேவைப்பாட்டினைப் பரீட்சித்து முற்பணங்கள் செலுத்த வேண்டியதுடன் பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணங்கள் பயன்படுத்தப்படவில்லையாயின் உடனடியாகத் தீர்த்து வைக்கப்படல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நாட்கள் வரையான காலம் பணத்தை கையில் வைத்திருந்து மீண்டும் தீர்த்து வைக்கப்பட்டிருந்தது. | தீர்த்து வைக்கப்பட்டுள்ளது. | வேண்டும். |
| (உ) | 2017 நவம்பர் 07 ஆந் திகதிய 22/99 (XXXIII) ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கை. | பிரதி / உதவி மட்டத்திலுள்ள பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்களுக்கு குழு போக்குவரத்து வசதிகள் மாத்திரம் வழங்கக்கூடிய போதிலும் சபையினால் உதவி பணிப்பாளர் (நிருவாகம்) உதவி பணிப்பாளர் / அபிவிருத்தி) ஆகிய உத்தியோகத்தர்களுக்கு தனிப்பட்ட போக்குவரத்து வசதிகள் வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்காக மீளாய்வாண்டின் போது முறையே ரூபா 72,254 மற்றும் ரூபா 70,207 தொகைகள் செலுத்தப்பட்டிருந்தன. | ஊரிய 06 மாத காலத்தின் போது அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பணிப்பாளர் சபையின் 2643/391/2018 ஆம் இலக்க பதவிநிலைப் பத்திரத்தின் பிரகாரம் ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. எதிர்காலத்தில் நடாத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்ட நிதிப்பிரமாணம் 104 விசாரனையின் சிபார்சுக்கு இணங்க அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | போக்குவரத்து வசதிகளுக்காகச் செலுத்தப்பட்ட பணத்தை அறவீடு செய்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான சபையின் நிதி விளைவுகள் ரூபா 41,940,044 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 37,472,381 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 4,467,663 முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் போது திறைசேரி மற்றும் விவசாய அமைச்சிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நிதி ஏற்பாடு ரூபா 8,827,615 ஆல் அதிகரித்தல், நிலையான சொத்துக்களின் பராமரிப்பு மற்றும் திருத்தம் செய்தல் செலவுகள் ரூபா 3,200,003 ஆல் குறைவடைதல். இறக்குமதி செய்யப்பட்ட இறுங்கு செயற்திட்டத்தின் மூலம் ரூபா 41,075,571 வருமானம் பெற்றுக்கொள்ளல், நிலையான மற்றும் சேமிப்பு வைப்புக்களுக்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட வட்டி ரூபா 3,800,894 ஆல் அதிகரித்தல் மற்றும் ஏனைய வருமானம் ரூபா 1,908,097 ஆல் அதிகரித்தல் மேற்கூறிய நிதி விளைவுகளின் முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மை.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | உள்நாட்டில் சோயா போஞ்சி பயிர்ச்செய்கை செய்யும் விவசாயிகளை பாதுகாக்கும் குறிக்கோளுடன் விவசாய அமைப்புக்களிடமிருந்து ரூபா 97.57 இற்கு சோயா போஞ்சிகளை கொள்வனவு செய்வதற்காக செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தும் அந்த விலைக்கு மிகையாக ரூபா 107.97 செலவு செய்து விவசாய அமைப்புக்கள் அல்லாத ஏனைய நிறுவனங்களிடமிருந்து 2016 இலிருந்து 2018 வரை சோயா போஞ்சிகளை கொள்வனவு செய்வதற்காக 01 கிலோ கிராமிற்கு ரூபா 10.40 வீதம் ரூபா 5,238,750 மேலதிக செலவு ஏற்பட்டிருந்தது. | திறீபோசா கம்பனிக்கு கட்டளைகளை ஒப்படைக்கும் தேவைப்பாட்டின் பேரில் அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட சோயா போஞ்சிக்குப் பதிலாக ஏனைய நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் ஒரு கிலோ சோயா போஞ்சிக்காக ரூபா 11.05 பணத்தை மேலதிகமாகச் செலுத்த வேண்டியிருந்தது. நிறுவனத்தினால் ரூபா 10.40 மாத்திரம் மேற்கூறிய கம்பனிக்கு மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. | விவசாய அமைப்புக்களிடமிருந்து மாத்திரம் அங்கீகரித்த விலைக்கு சோயா போஞ்சிகளை கொள்வனவு செய்தல் வேண்டும். |
| (ஆ) | திறீபோசா கம்பனியால் நிர்ணயிக்கப்பட்ட மாதிரிகளுக்கு இணங்கியிருக்காமையின் காரணமாக 34,740 கிலோ கிராம் நிராகரிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிராகரிக்கப்பட்ட இருப்பில் 5500 கிலோ கிராம் சபையினால் உற்பத்தி செய்த மவ் போசாவிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. திறீபோசா கம்பனியால் நிராகரிக்கப்பட்ட இருப்பை மவ்போசா உற்பத்திக்கு பயன்படுத்துவதன் மூலம் உயர் சுகாதாரமுள்ள சமூகத்தை உருவாக்கும் குறிக்கோள்களை அடைந்து கொள்ளும் இலக்காகிய ஊட்டச்சத்திற்கு அதிக தரமுள்ள மூலப்பொருட்களை வழங்குதல் இடம்பெற்றிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | திறீபோசா கம்பனியால் நிராகரிக்கப்பட்ட இருப்பை மீண்டும் செயன்முறைப்படுத்தி பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளக் கூடிய நல்ல நிலையில் உள்ள 5.5 மெட்ரிக் தொன் அளவான சுத்திகரிக்கப்பட்ட மவ்போசா உற்பத்திக்காக பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் அந்த இருப்பு மனித பாவனைக்கு பொருத்தமான நிலையில் காணப்பட்டது. எஞ்சியுள்ள இருப்புக்கள் கால் நடை உணவுக்காக விற்கப்பட்டன. | சபையின் உற்பத்திக்காக நிர்ணயிக்கப்பட்ட மாதிரிகளுடனான மூலப்பொருட்கள் பயன்படுத்தப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | சபையின் இரண்டு உத்தியோகத்தர்கள் ரூபா 201,850 செலவு செய்து இறுங்குகளை கொள்வனவு செய்யும் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தும் நிர்ணயிக்கப்பட்ட மாதிரிகளுக்கு இணக்கமற்ற இறுங்குகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இது சம்பந்தமாக சபை எதுவித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கவில்லை. | சுபையினால் இது சம்பந்தமாக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |

**3.2 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | ரூபா 200,000 மதிப்பீட்டுப் பெறுமதியான 04 சக்கர உழவு இயந்திரம் ரூபா 16,000 பெறுமதியான ஒரு கலப்பை 05 ஆண்டுகளுக்கு அண்மித்தகாலமாக பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது கலங்குட்டிய தொழிற்சாலையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | 1476 ஆம் இலக்க உழவு இயந்திரம் 2016 ஆம் ஆண்டிலிருந்து ஓடுவதிலிருந்து ஒத்திவைக்கப்பட்டுள்ளதுடன் தற்பொழுது அதனை கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. மேலும் கலப்பையை கைதவிர்ப்புச் செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | திருத்தம் செய்து பயன்படுத்தப்படுவதற்கு அல்லது கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 04 நீர்பம்பிகள் 08 மின்சார மோட்டார்கள், ஒரு பிளாஸ்ரிக் நீர்த்தாங்கி (500L) மற்றும் பயன்படுத்தக்கூடிய 1,976 மூடை அரிசிமாவு என்பன பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது விளைவற்றுக்காணப்பட்டன. | இப்பொருட்கள் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாத நிலையில் உள்ளதுடன் அவற்றை திருத்தம் செய்தல் விறைவற்றது என்பதனால் அதனை எதிர்காலத்தில் கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | பயன்படுத்த முடியாதுவிடின் கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |